# திஜானா...



T.சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்குறிப்பு

நூற்தலைப்பு– றிஷானா.
நூலாசிரியர் – தி. சசிகரன்.
பதிப்பாண்டு– 2013
பக்கங்கள் – 24+(11)
அச்சிடல்– வேழன் பதிப்பகம்
& K.V.M. Brother's

Title:- Rizaana.
Auther:- T.sasikaran.
Edition:- 2013
Paghs:- 24+(11)
Published by:- velan & K.V.M brother's

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஷானா.

தி.சசிகரன்.

கிளி/அக்கராயன் ம.வி

நூலக அன்பளிப்பு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றிஷானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"இன்றைய மனிதன் காலங்களைக்கடந்தவன்". மனிதன் வாழும் பேர் அதிஸ்ரம் கொண்ட இந்தப்பூமியில் மனிதன் பல்வேறு யுகங்களைத்தாண்டி புதிய பரினாமமாய் ஏனைய உயிரினங்களுக்கு ஓர் உதாரணமாய் வாழ்கின்றான். எனினும், அவனது வாழ்க்கைமுறை நாளுக்குநாள் மாறிக்கெண்டு வருகிறது. அவனது மனிதக்குணங்களும் படிப்படியாக வீழ்ச்சிகண்டு வருகின்றது. 'இறைவனே மேலானவன், அவனே எம்தலைவன்' என வழிபட்ட மக்கள் கூட்டத்துக்குள் தானும் ஒருவனாக வழிபட்ட எம்மவன் இன்று தானே கடவுள், தன்னையே பிறர் வழிபட வேண்டும் என்ற மிருக குணத்துக்குள் ஆட்பட்டுக்கொண்டிருக்கின்றான். அவனது அரக்ககுணம் மனித இனத்துக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. வாழும்காலமும் வாழ்க்கை முறைகளும் கனத்த வேகத்தில் மாற்றமடைந்து வருகின்றது. ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மனிதனுக்கும் இன்றைய காலத்தில் மனிதனென்று கூறிக்கொண்டு வாழும் எமக்கும் எவ்வளவோ இடைவெளிகள் ஏற்பட்டு விட்டன. இன்று ஒவ்வொரு நாடுகளும் தனக்கென ஒரு தலைவன், தனக்கென ஒரு சட்டம், தனக்கென ஓர் தனித்துவ ஆட்சி, தனக்கென ஒரு நீதி இவ்வாறு தனித்துவத்தைப் பேனுவதற்காக தலைகெட்டு வாழப்பழகிக் கொள்கின்றன.

அந்தவகையில் எனது நூலானது இத்தகைய ஆளும் வர்க்கத்திடம் அறியாமல் மாட்டிக்கெண்டு உயிர் கொய்யப்பட்ட எமது நாட்டு ஏழைச்சகோதரி '**றிஷானா நபீக்**' அவர்களுடைய வரலாற்றையும் அவர் சுமந்த துயரங்களையும் என் வாசகர்களுக்கு வெளிக்காட்டும் ஓர் வரலாறாய் அமைகின்றது.

"சிட்டுக்குருவியாய் சிறகு கொண்டு பறந்தவளை பட்டமரமாய் பாலைவனத்தில் நாட்டி பாழ்படப் பண்ணினரே!ஐய்யகோ! காவியங்கள் பல எழுத நான் கவிஞன்மகன் இல்லை.என் உள்ளத்து உணர்வுகளை உரியவர்க்காய் சமர்ப்பிக்கும் ஓர் ஊர்க்குருவி"

22.06.2013
T.சசிகரன்

2013.06.22



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொலைக்களம்

அன்புச்சகோதரி ரிஷானாவைப்பற்றி பார்ப்பதற்கு முன்னர் அவருக்கு தீர்ப்பு வழங்கிய நாடு பற்றியும் சட்டங்கள் பற்றியும் பார்ப்பது தொடர்ந்து வரும் சம்பவங்களை உங்களுக்கு தெளிவுபடுத்த உதவுவதாக அமையும்.மத்தியகிழக்கு நாடுகளில் ஒன்றே 'சவுதிஅரேபியா'. இதன் தலைநகரம் 'றியாத்' என்பதாகும். "இந்த நாட்டின் தலை எழுத்தை தீர்மானிப்பவன் நானே!" என்கின்ற உள்நோக்கத்துடன் அரக்கமுடி தரித்தவர் வரிசையில் வழிவந்தவன் **அப்துல்லாஷ் பின் அப்துல் அலீஸ் அல் சவூத்** எனும்மன்னன். இங்கு இஸ்லாம் மதத்தினை அடிப்படையாகக் கொண்டே சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இங்கு எவ்வகை குற்றங்கள் நேர்ந்திடினும் தண்டனை மிகக் கொடூரமாக இருக்கும்.

இவ்வாறே நாட்டின் சட்டங்கள் பற்றியும் ஒழுக்கமுறை பற்றியும் இவ்ஒழுக்கங்களை மீறுவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் பற்றியும் கூறிநிற்கும் மிக முக்கியமான சட்டம் **ஷரிஆ** என்பதாகும். இது முஸ்லீம் மக்கள் போற்றும் அல்லாவாகிய இறைவனால் அருளப்பட்டு நபிகள் நாயகத்தால் புனித குர்ஆன் மூலம் வழங்கப்பட்ட ஓர் சட்டமாகவே இஸ்லாமியர்கள் கருதுகின்றனர். உலகின் பல நாடுகளில் றோமன், டச்சு, ஆங்கிலச்சட்டங்கள் இருந்து வருவதைப்போன்றே **ஷரிஆ** சட்டம் இருந்து வருகின்றது. **ஷரிஆ** சட்டம் குறித்து நிற்பது **'கொலைக்குக் கொலை'** என்ற மகுடவாசகத்தை ஆகும். இது குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், நீதிகள் நியாயங்கள் காக்கப்படவேண்டும் என்பதற்காக இன்றும் கடைப்பிடிக்கப் படுகின்றது. உலகின் எந்த ஒரு நாடும் தனது சட்டத்தை முழுமையாகவும், நேர்மையாகவும் போற்றி மதித்து நடைமுறைப்படுத்துகின்றது என்பதை மனச்சாட்சியை மையப்படுத்தி கூறிவிட முடியாது. அவ்வாறு இருக்கையில் சவுதியால் மட்டும் சட்டங்கள் முழுமையாகவும், நேர்மையாகவும் எவ்வாறு கடைப்பிடிக்க முடிந்திருக்கும்?

இல்லை! எங்கேயோ தவறுகள், பக்கச்சார்புகள், அநீதிகள் இருந்து வருகின்றன. குறிப்பாக ஒவ்வொரு நாடுகளில் இருந்தும் வேலை தேடி வருகின்றவர்கள் இத்தகைய நாடுளின் சட்டங்களுக்குள் அகப்பட்டு "கனத்த வெயிலில் கழுமரம் ஏற்றப்படுவதைப்போல்" கொடூரமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரவதைகளுக்கு உட்பட்டு வருவது இதற்கு சான்றுபகர்கின்றது. பிழைப்புத்தேடி வருபவர்கள்மீதுதான் இவ்வரசு தனது அடிமைச்சாசனத்தை எழுதுகின்றதுபோலும்! ஒருவன் எத்தகைய குற்றங்கள் புரிந்திருப்பினும் அவனை நடு வீதியில் நாலுபேர் சேர்ந்து தூக்கிலிடுவதும், அவர்களது தலைகளைக் கொய்துவிடுவதும், கைகளை, கால்களை நறுக்கி விடுவதும் அவனது குற்றத்திற்கு பரிகாரமாக அமைந்து விடுமா? 'எல்லா மனிதர்களும் ஓர் நாளில் மரணித்துதான் அகவேண்டும்' என்பது உலகம் ஏற்றுக்கொண்டதொன்று. அதற்காக குறித்த மனிதன் எத்தகைய குற்றங்கள் புரிந்திடினும் அவனுக்கு தண்டனை என்கின்ற பெயரில் பரிசாக வழங்கப்படும் மரணம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதா? இத்தகைய கொடூரங்களை சவுதிஅரசாங்கம் தினம்தினம் தண்டனை, சட்டம் என்கின்ற பெயரில் அரங்கேற்றி வருகின்றது.

கடந்த 2012ம் ஆண்டில் மட்டும் 76பேரை மரணதண்டனைக்கு உட்படுத்தி இருக்கின்றது இவ்வரசு. இவ்வாறு வகைதொகையின்றி கொலைவெறித்தாண்டவத்தை நிறைவேற்றிவரும் சவுதிஅரசு உலகநாடுகளுக்களின் கண்முன்னே **ஷரிஆ** எனும் சட்டத்தின்பின் மறைந்து வாழ்கின்றது.

இலங்கை நாட்டில் இருந்து மட்டும் மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக வேலைக்குச்சென்ற பெண்களின் எண்ணிக்கை மட்டும் 18 இலட்சமென அண்மையில் வெளியான வலம்புரி நாழிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. மேலும் இவ்வாறு பணிப்பெண்ணாக சென்ற பெண்ஒருவர் உட்பட இன்னும் மூன்று இலங்கை ஆண்கள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்கள் எனவும், அவர்கள் புத்தர்சிலை வைத்திருந்தார் எனவும், வைபிள் வைத்திருந்தார் எனவும், நபிகளை இகழ்ந்தார் எனவும், மந்திரம்ஓதி மணிக்கட்டில் கட்டும் கயிற்றை வாங்கினார் எனவும் கைதுசெய்து சிறை வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் மரணதண்டனைக்கு உட்படுத்தப்படும் அபாயம் உள்ளதாகவும் குறித்த நாழிதழ் கூறுகின்றது.

இவ்வாறு அவர்கள் புரிந்த தவறு கடுகளவாக இருக்கின்றபோதும் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் மட்டும் மலையழவவாக இருக்கின்றது. வேறு எந்த நாட்டிலும் இல்லாத கொடூரம் இங்குமட்டும் எவ்வாறு சாத்தியமாகின்றது? ஆண்களாக இருந்தாலும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்களாக இருந்தாலும் தண்டனையின் உக்கிரம் உயர்வானதுதான். ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக தனது மதத்தை தெரிவுசெய்வதற்கு உரிமை உள்ளது. எனினும் புத்தர்சிலை வைத்திருந்ததற்கும், பைபிள் வைத்திருந்ததிற்கும் சிறையில் அடைக்கும் சட்டம் எவ்வாறு சாத்தியமாகும்?, இது அங்கு எத்தகைய தாக்கத்தைத்தான் ஏற்படுத்தி விடப்போகின்றது?. எந்த ஒரு மனிதனுக்கும் உயிர் ஒன்றினை ஆக்கும் சக்தி இல்லை இப்படி இருக்கையில் உயிர் ஒன்றினை அழிக்கும் சக்தி/ உரிமையை மட்டும் உன் கையில் கொடுத்தது யார்???

மேலும் பிழைப்புத்தேடி வரும் அயல்நாட்டவர்கள் படும் துன்பங்களுக்கெல்லம் தலைசாய்க்காத இந்தச்சட்டங்கள் குறித்த ஒருவனால் இழைக்கப்பட்ட குற்றத்திற்குமட்டும் அவனை பலிக்கடாவாக்க முன்னிற்கின்றது. அன்மையில் இலங்கைக்கு திரும்பிவந்த பணிப் பெண்ணாக சென்ற பெண் ஒருவர் உடல்லெங்கும் ஆணிகள் ஏற்றப்பட்டு மிகவும் கவலைக்கிடமான நிலையில் தப்பிவந்தார். இவ்வாறு எமது நாட்டு பெண்கள் மற்றும் அயல்நாட்டு பெண்கள் நாளுக்குநாள் படும் துன்பங்களுக்கு தலைசாய்க்காத இந்நாட்டுச் சட்டம் எவ்வாறு சரியான நீதியை வழங்க முடியும்? குறித்த நாடுகளுக்கு வேலைக்குச்செல்லும் பெண்கள் உடலளவிலும் மனதளவிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எண்ணில் அடங்காதவை. இவற்றையெல்லாம் கருத்தில் எடுக்காமல் தண்டனைகளை மட்டும்வழங்குவது எவ்வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியது?'வெளிநாட்டு பணிப்பெண்கள் இந்நாட்டு அடிமைகள்' என குறித்த அரசாங்கம் மனதில் நினைத்துச்செயற்படுவது அதனுடைய செயற்பாடுகளில் இருந்து தெரிகின்றது. இவ்வாறான கொடுமையான செயல்களில் ஈடுபடும் சவுதி அரசை எவ்வித சலனமும் இன்றி உலகநாடுகளும் வேடிக்கை பார்ப்பதுதான் ஆச்சரியமளிக்கின்றது. இருந்தும் இந்நாடுகள் தன்னை உற்று நோக்கும் நாடுகளிடம் இத்தகைய சர்வதிகார ஆட்சிநடத்தும் நாடுகளை எதிர்க்கிறோம் எனக்கூறிக்கொண்டு சிறியசிறிய கண்டனங்கள், விமர்சனங்கள் செய்வது போன்ற கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தப்பிக்க நினைப்பதுதான் வேதனையளிக்கின்றது.

எது எப்படி இருப்பினும் கொஞ்சங்கூட ஈவிரக்கம் இன்றி மனித உயிர்கள் வகைதொகையின்றிக் கொல்லப்படுகின்றமை மனச்சாட்சி உள்ள எந்த மனிதனையும் கவலையில் ஆழ்த்தும் விடையமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள றிஷானா.....

09.01.2013, புதன்கிழமை, இலங்கை நேரம் பி.ப 2.10மணி.......... சவுதியின் றியாத் நகரில் நடந்தது அந்தக்கொடூரத்தாண்டவம். நீதியின் கண்கள் கட்டப்பட்டு அதன் கழுத்தை பெரிய வாள் பதம்பார்த்தது. ஆம் நிச்சயமாக நீதி அன்று சவுதி மண்ணில் இரத்த ஆற்றில் புதைந்து இறந்து விட்டது.

தகவல் தெரிந்ததும் துடித்துப்போனோம். எங்கள் ஆழ்மனதில் இருள் குடியேறிற்று; இதயம் பதைபதைத்து கண்கள் கவலையில் உறைந்து போயிற்று. ஆம்! அது மூதூர் மண்ணின் ஓர் குடிசையில் மட்டும் நிகழ்ந்த மாற்றம் அல்ல மனிதாபிமானமுள்ள ஒவ்வோரு மனித மனங்களிலும் ஏற்பட்ட துயரம். அன்று எல்லா மனித மனங்களிலும், உதடுகளும் உச்சரித்த ஒரேபெயர் **றிஷானா...M.s.**நபீக் சாபி.ٰ.நகர், மூதூர். குறித்த முகவரி இக்குலவிளக்கின் வதிவிடம். நபீக்-பரீனா தம்பதினரின் மூத்த புதல்வியாய் 02.02.1989 அன்று பிறந்தவள்தான் **றிஷானா.**

இவளுக்கு மேலும் இரு சகோதரிகளும், ஒரு சகோதரனும் உண்டு. மூதூர் மண்ணில் இக்குடும்பம் மிகவும் வறுமைப்பட்டதாகக் காணப்பட்டது. 2004இல் ஏற்பட்ட சுனாமி இக்குடும்பத்தை மேலும் வறுமை நிலைக்குத்தள்ளியது. அடிப்படைத்தேவைகள் கூடப்பூர்த்தி செய்யமுடியாமல் அன்றாட உணவுக்கே அல்லறபடும் நிலைமை. றிஷானாவும் சகோதரர்களும் பாடசாலை செல்லும் பாலகர்கள். இருந்தும் அவர்கள் மற்றவர்கள் போன்று தங்களது குடும்பமும் பொருளாதாரத்தில் முன்னேறவேண்டும் என்ற ஒரு ஆசை அவர்கள் மனதில் குடிகொண்டிருந்தது. இல்லை என்றால் அவள் பின்னாளில் அப்படி ஒரு முடிவு எடுத்திருக்க வாய்ப்பு இல்லை என்றே கூறமுடியும்.

இந்தப்பூமியில் பிறந்து வறியவர்கள் ஆகிவிட்டால் நாம் ஏற்கும், சுமக்கும் துன்பங்கள் கொஞ்சமில்லை. ஏழையின் வாழ்க்கையில் பாதி கண்ணீரிலே முடியும் என்பது நிச்சயம் உண்மைதான்.

தொழில் ஏதுமற்ற நிலையில் தந்தையும், கல்விக்கும், உணவுக்கும் போதிய வருவாய் அற்ற நிலையில் ஓலைக்குடிசையில் உறைந்து போன கனவுகளுடன் அவர்களுடைய குடும்பமும் காலத்தை நகர்த்திச்சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய காலத்திலேயே றிஷானா தனது குடும்ப முன்னேற்றத்திற்காகவும் சகோதரர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் அவளின் மனதில் தோன்றுகிறது. சராசரி மனிதர்களைப்போல் தனது சகோதரர்களும் வாழவேண்டும், எனது குடும்பமும் பொருளாதாரத்தில் உயரவேண்டும் இதற்கெல்லாம் தனது குடும்ப வறுமை ஒழியவேண்டும் எனும் முடிவுடன் தனது பள்ளிப்படிப்பை இடைநிறுத்துகின்றாள்.

இன்றைய உலகில் எத்தனை பேருக்கு இத்தகைய சிந்தனை வருகின்றது? தான் சுகமாய் வாழ்ந்தால்போதும் மற்றவர்கள் எவ்வாறு போனால் என்ன என நினைக்கின்ற இந்தக்காலத்தில் தனது குடும்பத்துக்காய் தன் வாழ்வைப் பணையம் வைக்கின்றாள் றிஷானா. இத்தகைய நல்லெண்ணம் நம்மில் எத்தனை பேருக்கு இருக்கின்றது? இங்கே தன்குடும்பம்மேல் ஒரு பெண்ணாக அவள் கொண்ட அக்கறை எல்லோராலும் வியக்கத்தக்கது.

இவ்வாறு இருக்கையில் ஏழை மக்களின் அபிலாசையாக பெரிதும் இருப்பது "எங்கள் குடும்பத்தில் யாராவது வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டால் எங்கள் குடும்பமும் முன்னேறிவிடும்" என்பதாகும். இவ் எண்ணம்தான் றிஷானாவின் வீட்டிலும் துளிர்விட ஆரம்பித்தது. எப்படியாவது தன்னுடைய சகோதரர்களும் பெற்றோரும் ஒருவேளை உணவையாவது நிம்மதியாக உண்ணவேண்டும் என்கின்ற வேட்கைதான் இவளை பாலைவனத்தை நோக்கி செல்ல வைத்தது.

றிஷானா 17 வயது நிரம்பிய சிறுமி. தனது சகோதரர்களுடன் ஒரேதட்டில் உண்டு தாயின்மடிதூங்கி, தந்தை கன்னங்கிள்ளி, பாடசாலை நண்பர்களுடன் ஓடி ஆடவேண்டிய வயதுஅது. ஆயினும் குடும்ப நிலையை உணர்கின்றாள். 18 வயது கடந்து இருந்தால்தான் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்ணாகச்செல்ல முடியும். ஆயினும் வறுமையின் கொடுமை அவர்களை வரம்பு மீறச்செய்கின்றது. சட்ட விரோதமான முறையில் அவளது பிறந்த திகதி 02.02.1982 என மாற்றப்படுகின்றது.

பின்னர் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான சவுதிஅரேபியாவுக்கு தன்னந்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றாள். 01.04.2005 குறித்த தினத்தன்று சவுதிவந்து சேர்கிறாள் **றிஷானா**. பாடப்புத்தகங்களையும் பெற்றோரையும் அன்றி வேறு எதிலும் பரீட்சயம் இல்லாத றிஷானா. புரியாத ஊரில் இறங்கி திகைத்து நிற்கின்றாள். வீட்டின்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# றிஷானா வீட்டின் வறுமைக்கோலங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றிசானாவின் தாய், தந்தை மற்றும் சகோதரிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களைத்தவிர அவளுடன் கூடவந்தது எதுவுமில்லை. றிஷானா சவுதி வந்தபோது குறித்த நாடு பற்றிய முன்னறிவு ஏதும் இருக்கவில்லை. சவுதியில் இருப்பவர்களுக்கும் அவளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதுமட்டும் அவளுக்குப்புரிந்திருந்தது.

"கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல்' என்பதன் உதாரனத்தை அப்போதுதான் நன்கு புரிந்திருப்பாள்.

பின்னர் **றிஷானா** ஓரிரு தினங்களில் ஓர்வீட்டில் தங்கவைக்கப்படுகின்றாள். பின்னர் **நஜீப் அல் ஒடைபி** என்பவரின் வீட்டில் பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றாள். தாயின் அரவணைப்பில் வாழ்ந்த அந்தச்சிறுமி தற்போது ஒரு குடும்பத்திற்கே பணிவிடை செய்யும் நிலைக்குத்தள்ளப்படுகின்றாள். என்ன செய்வது? தான் நேசிக்கும் தனது பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் சுபீட்சமான ஓர் எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவளிடம் நிலை கொண்டு இருந்தது. குறித்த வீட்டில் உடுதுணிகளைத் துவைத்தல், வீட்டைச்சுத்தப்படுத்தல் போன்ற வேலைகளுடன் 4மாதக்குழந்தை ஒன்றையும் பராமரிக்கும் பொறுப்பும் அவளிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. தனது கஸ்ரங்களுக்கெல்லாம் விடிவுகாலம் பிறந்துவிடும் என்ற ஒரே காரணத்துக்காக எந்த வேலையைக்கொடுத்தாலும் முகம் சுழிக்காமல் செய்து முடிப்பதாக அவள் பின்னாளில் வீட்டுக்கு எழுதிய கடிதத்தில் இருந்து தெரிய வருகின்றது.

இவ்வாறு தனது குடும்பத்திற்காக அவள் அயராது துன்பப்பட்டு வருகின்றாள். அவள் வேலை செய்யத்தொடங்கி $1\frac{1}{2}$ மாதங்களே கடந்து இருக்கும். அப்போதுதான் அந்தச்சம்பவம் நடந்தேறுகிறது. அன்று 22.05.2005 ஞாயிற்றுக்கிழமை ஜிசியானின் மனைவியான வீட்டு எஜமானி தனது பச்சிளம் குழந்தையை றிஷானாவின் பார்வையில் விட்டுவிட்டு வெளியில் எங்கோ சென்று இருந்தாள். அவள் செல்லும்போது சற்று நேரத்தின்பின் குழந்தைக்கு புட்டிப்பால் கொடுக்குமாறும் கூறிவிட்டுச் சென்றிருந்தாள். றிஷானா வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்துவிட்டு வீட்டின் எஜமானி கூறியது நினைவுக்கு வரவே புட்டிப்பாலுடன் குழந்தை அருகே செல்கின்றாள். குழந்தையை மடியில் வைத்து பால்புட்டியை குழந்தை வாய் அருகே கொண்டு செல்கின்றாள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ! இந்தத் தருணம்வரை அவள் கொஞ்சங்கூட நினைத்துப்பார்த்திருக்கமாட்டாள். தனது வாழ்க்கையை புரட்டிப்போடும் முக்கிய திருப்புமுனை இது என்பதை.

றிஷானா குழந்தைக்குப் பாலைப்பருக்குகின்றாள். சிறிது நேரத்திற்குள் குழந்தையின் வாயில் இருந்தும் மூக்கிலிருந்தும் பால் வெளியில் வரஆரம்பிக்கின்றது. ஆம் குழந்தை மூர்ச்சையுற்று இருக்க வேண்டும். எனினும் றிஷானா குழந்தைக்கு ஏதும் ஆகிவிடக்கூடாது என்பதற்காக குழந்தையின் முதுகைத் தடவி விடுகின்றாள். பின்குழந்தை தூங்குகின்றது என எண்ணி குழந்தையை கட்டிலில் கிடத்தி விட்டு மீண்டும் வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கின்றாள். ஆனால் குழந்தை குறித்த சம்பவம் நிகழ்ந்த போதே இறந்து விட்டது. ஆனால் அது றிஷானாவுக்கு தெரிந்து இருக்கவில்லை. அதனைப்புரிந்து கொள்ளும் வயதுப்பக்குவத்திலும் அவள் இல்லை. சிறிது நேரம்களித்து வீட்டு எஜமானர் வருகின்றார் குழந்தையை பார்து அதிர்ந்து போகின்றார். றிஷானாவுக்கு புரியாத வார்தைகளால் திட்டித்தீர்க்கின்றார். அப்போது தான் அவளுக்கு நிலமை புரிகின்றது. ஆனால் நடந்த சம்பவத்தை எவ்வாறு புரியவைப்பது? எவ்வாறு புரியவைத்தாலும் கேட்கும், விளங்கிக்கொள்ளும் நிலையில் வீட்டு எஜமானர் இல்லை.

ஆத்திரம் மேலோங்க றிஷானாவை கைகளாலும், காலணியாலும் தாக்குகின்றார். பின் குழந்தையுடன் பொலீஸ் நிலையம் செல்கின்றார். சிறிது நேரத்தில் பொலீஸ் றிஷானாவைச்சூழ்ந்து கொள்கின்றது. காவல் நிலையத்தில் வைத்தும் பொலீஸ் தன்னை அடித்ததாகவும் தனது முகத்தில் இருந்து இரத்தம் வந்ததாகவும் அவள் 2007இல் சிறையில் இருந்து எழுதிய கடிதத்தின் மூலம் தெரிய வருகின்றது.

அறியாத ஊரில் புரியாத பாசை பேசுகின்றவர்களிடம் பாவம் அந்த 17 வயதுச்சிறுமி எவ்வாறு உண்மை நிலையை புரிய வைக்கமுடியும்? அவள் சவுதியில் பழகிய உறவுகள் என்று கூறுவதற்கு அவளுக்கு யாரும் இருக்கவில்லை. ஏன் சவுதிபற்றிக்கூட அவளுக்கு புரிந்திருக்க வாய்ப்பே இல்லை. அது எப்படி 1½ மாதங்களில் முடியும்?

றிஷானா குற்றங்களை ஏற்றக்கொண்டதாக கூறி 2005 மே மாத இறுதியில் அவள் சிறையில் அடைக்கப்படுகின்றாள். மூதூரில் அவள் வாழ்ந்த வீட்டின் அமைப்புக்கும் சிறையின் அமைப்புக்கும் ஏதோ ஒரு ஒற்றுமை மட்டும் உள்ளது. ஆனால் வேற்றுமையோ பல..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தனது தாயுடன், தந்தையுடன், தனது சகோதரர்களுடன் சேர்ந்து இருக்கையில் ஏற்படும் சந்தோசம் ஒன்றிற்காய் சிறைக்கம்பிகளுக்கிடையே ஏங்கிக்கொண்டு இருகின்றாள். ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்து அனுபவிக்கும் சந்தோசங்களில் எதற்கும் ஈடாகாத சந்தோசம் தன் குடும்பத்துடன் ஒன்றாய் இருந்து ஒரே தட்டில் உணவுண்டு, சிறுசிறு சண்டைகள் பிடித்தும். அப்பாவின் அன்பும், அம்மாவின் அரவணைப்பும், தங்கைகளின் குறும்பும் இவை எல்லாவற்றிற்கும் ஈடாக வேறு ஒரு இன்பம் இந்தப்பூமியில் உண்டோ?

17வயது பட்டாம்பூச்சியாய் இந்தப்பூமியில் எத்தனையோ பெண்கள் கல்வி, நட்பு, சுதந்திரம், காதல் என எத்தனையோ விடயங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவளும் இந்த வயதுப்பெண்தானே! எதற்காக இந்த வாழ்க்கை? வறுமை என்பது மனிதனை ஒடுக்கும் இரும்புக்கரங்களா? அதற்கு ஏழைகள்தான் பலிக்கடாக்களா? ஓ..காலனே!

உனக்கு கண்கள் என்ன மங்கிப்போய்விட்டதா? பூத்த பூவிற்கும் பழுத்த பழத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லயா? புதுமணம் வீசும் பூக்கள் பூமாலையில் அல்லவா சேரவேண்டும்; மாறக அவற்றை சுடுமணலில் புதைப்பது எவ்வகையில் நியாயம்? உண்மையில் றிஷானாவிற்குத் தீர்ப்பு வழங்கிய முறை பற்றி ஆழமாகப் பார்ப்போமானால் எந்த நீதிமன்றத்திற்கும் சாட்சிகளும், ஆதாரங்களும் மட்டுமே தீர்ப்பு வழங்கத்தேவை. ஆனால் றிஷானாவிடயத்தில் இவளுக்குச்சார்பாக எவ்வித சாட்சிகளும் காணப்படவில்லை. அவளுக்குச்சார்பாக வக்கீலுடைய ஆதரவை பெற்றுக்கொள்வதிலும் அவள் பாரிய பிரச்சினையில் சிக்கிக் கொள்கின்றாள்.

தமிழ் மொழியை மட்டுமே தெரிந்து வைத்துள்ள றிஷானாவால் எப்படி அரபு மொழியோடு சமாளித்துக்கொள்ள முடியும்? இது தொடர்பில் இவளுக்கு சவுதி அரசு எவ்வித உதவிகளையும் செய்து கொடுக்கவில்லை என்பதை மட்டும் நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது. காவல் நிலைய விசாரணைகளில் றிஷானாவின் தாய்மொழியான தமிழும் அங்குள்ள அரபு மொழியும் நன்கு தெரிந்திருந்த ஒருவரை மொழிபெயர்ப்பாளராக நியமித்து இருந்தால் கூட வாக்குமூலம் உரியபடி அமைந்து இருக்கும். ஆனால் இவ்வாறான எவ்வித உதவிகளையும் மேற்கொள்ளவில்லை. இதற்கான வாய்ப்பைக்கூட ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இந்நிலையில் ஷரிஆ சட்டம் தன் வேலையைக்காட்ட அரம்பிக்கின்றது. இவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷரிஆ சட்டத்தின்படி குற்றவாளியாக இனங்கானப்பட்டு தவாடமி மேல்நீதிமன்ற நீதிபதி **அப்துல்லா அல் றொசைமி** தலைமையிலான மூவர் அடங்கிய குழு 2007.06.16ஆம் திகதி மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது. றிஷானா அதிர்ந்து போகின்றாள், நிலை குலைந்து, உடல் தளர்ந்து செய்வதறியாது திகைக்கின்றாள். "ஓ.. அல்லா...! குறித்த சம்பவம் எல்லாம் ஓர் கனவாய்ப் போகாதா? நான் என் பெற்றோரைப் பார்க்க முடியாதா? இனியும் என் அப்பாவைக்கட்டி அணைத்து, என் அம்மாவிற்கு முத்த மழை பொழிய முடியாமல் போய்விடுமா? அன்புத்தம்பி, ஆசைத்தங்கைகள் இவர்களுடன் அந்த அழகான மண்வீட்டில் மண்சோறு சமைத்து

விளையாடிய அந்தப்பசுமையான நினைவுகள், தங்கை பள்ளிசெல்ல அவளுக்குத் தலைவாரிவிட்ட ஞாபகங்கள், அம்மா ஆக்கித்தந்த அந்த அருமையான பாற்சோறு... மீண்டும் ஒருவாய்... கிடைக்காதா? நாங்கள் மகிழ்ச்சியாக துள்ளி விளையாடும்போது அப்பாவின் முகத்தில்தோன்றும் அந்த நட்சத்திரச் சிரிப்பு ஐயோ! இவை எல்லாம் எனக்கு இப்போதே கிடைத்தாகவேண்டும், நான் என் மூதூரில் என் மக்களோடு, என் குடும்பத்தோடு பழைய வாழ்க்கை என்றாலும் பறவாயில்லை." இவ்வாறெல்லாம் அந்த ஏழைச்சிறுமி மனங்குமுறிப்புலம்புகின்றாள். இவற்றை எல்லாம் நினைத்துப்பார்க்கையில் அவள் கண்களின்ஓரம் கண்ணீர் கன்னங்களை நனைக்கின்றது. ஒரு பிள்ளை தன்பெற்றோருடன் இருக்கும்போது உண்டாகும் பசுமையான நினைவுகள் எங்கு சென்றாலும் அப்பிள்ளையின் மனதில் பசுமையான சாரலை வார்க்கும். அதுவே சொர்க்கம்.

இவ்வாறு குறித்த அரசாங்கம் மரண தண்டனை வழங்கியபின் றிஷானாதரப்பில் விரும்பினால் மேல் முறையீடு செய்யலாம் என்று கூறியது. அதன்பின்புதான் தகவல் றிஷானாவின் குடும்பத்திற்குத் தெரிகின்றது.

அவர்கள் இதுவரையில் தன்பிள்ளை எங்கேயோ சந்தோசமாக இருக்கின்றாள் என்றே நினைத்து இருந்தனர். ஆனால் தகவல் கேள்விப்பட்டதும் அதிர்ந்து போய்விட்டனர். அவர்கள் தங்கள் வசதிக்கேற்ப ஒவ்வொரு அரசியல் வாதிகளின் கைகளைப்பிடித்து உதவி கேட்க ஆரம்பிக்கின்றனர். மறுகணம் மனித உரிமை அமைப்புக்களும் றிஷானாவைக்காப்பாற்றும் நடவடிக்கைகளில் இறங்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை அமைப்புக்கள் றிஷானாவின் வயதை 17 என உறுதிப்படுத்தியும் கடவுச்சீட்டில் ஏற்படுத்தப்பட்ட மோசடிகளை சவுதி மன்னருக்கு தெளிவு படுத்தியும் மேல்முறையீட்டு நீதிமன்றம் மரணதண்டனையையே உறுதிப்படுத்தி நின்றது. இதனால் அவளின் விடுதலைக்காக உழைத்த பெரும்பாலானவர்கள் இனித்தங்களால் என்ன செய்ய முடியும் என நினைத்து சோர்ந்தே விட்டனர். மிகுதிக்கொஞ்சப்பேரும் றிஷானாவைக்காப்பாற்றும் ஏதோ ஒரு முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டே இருந்தனர். 2006.10.26 எமது நாட்டின் ஜனதிபதி றிஷானாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கக்கூறி சவுதி மன்னருக்க கடிதம் ஒன்றை அனுப்பினார். இதுவும் நிராகரிக்கப்படுகின்றது.

ஆம்! இந்த இடத்தில் மீண்டும் ஒருமுறை **ஷரிஆ** சட்டத்தை மீட்டிபார்ப்போம். பொது மன்னிப்பு என்பது பற்றி இச்சட்டத்தில் விளக்கப்படுகின்றது. பொது மன்னிப்பு என்பது மன்னரால் வழங்கப்படும் ஓர் செயற்பாடு அன்று. இழைக்கப்பட்ட குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பொது மன்னிப்பு வழங்க உடன்படும் சந்தர்ப்பத்தில் மன்னரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு குற்றவாளி விடுதலை செய்யப்படுவார் எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது. றிஷானா விடயத்தில் பொதுமன்னிப்பு வழங்க அப்போது அக்குடும்பத்தைச்சேர்ந்த யாரும் முன்வரவில்லை. இதனால் எம் நாட்டு ஜனாதிபதியின் கோரிக்கைக் கடிதமும் சபையில் ஏற்கப்படாமல் போனது. மேலும் அரசியல்வாதிகள் சவுதி சென்றும் எவ்வித பயனும் கிடைத்தாகத் தெரியவில்லை.

றிஷானாவின் விடுதலைக்காக சவுதியில் பணியாற்றியவர் **டாக்டர் கியாபா இப்திக்கார்.** இவர் கூறுகையில் "றிஷானா இறுதிக்காலம் வரையிலும் தன்னை தன்னாட்டு அரசாங்கம் காப்பாற்றும் என நம்பி இருந்தாள்" எனக் கவலை பொங்கக் கூறி இருந்தார். பின் நம் அரசாங்கத்தால் றிஷானாவைப்பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகின்றது. தனது தாயையும் தந்தையையும் கம்பிகளுக்குள் இருந்து றிஷானா பார்க்கும்போது என்னென்ன நினைத்திருப்பாள். ஏன்! பெற்றோர்களும் கூட பிழைப்புத் தேடிவந்த இடத்தில் பிள்ளைக்கு நேர்ந்த துன்பங்களையும், தமது கவலைகளையும் அவளிடம் எவ்வாறெல்லாம் அழுது தீர்த்து இருப்பார்கள். உண்மையில் பிள்ளைகள் சந்தோசமாக இருப்பதைப்பார்த்து சந்தோசப்படும் உறவுகள் பெற்றோர்கள் அன்றி வேறு எவரும் இருக்க மாட்டார்கள். அதேபோல் பிள்ளைகள் கவலைப்படும்போது பன்மடங்கு கவலைப்படுபவர்களும் பெற்றோர் அன்றி வேறுயாராகவும் இருக்க மாட்டார்கள். பெற்றோர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவுடனேயே அவர்களுடன் தன் சொந்த நாட்டுக்கே ஓடிவிடவேண்டும் என்ற எண்ணம் தான் தோன்றி இருக்கும். என்ன செய்வது கம்பிகள் அவளது கனவுகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்திருக்கும். எப்படியாவது நான் வந்துவிடுவேன். என்னை எனது நாட்டு அரசாங்கம் காப்பாற்றும் என்று ஆறுதல் வார்த்தைகள் கூறி அவள் அனுப்பிவைக்கின்றாள்.

சுதந்திரமாய் பறந்த கிளியை கூண்டுக்குள் சிறகுடைத்து அடைத்து வைப்பது அரக்க குணம் கொண்ட சிலருக்கே ஏற்படுகின்றது. ஆனால் அதன் கூண்டுகளை உடைத்து இந்தப்பரந்த பூமியில் அதனை பவனி வரச்செய்ய வேண்டும் என்ற ஆசைகூட இன்னும் குறிப்பிட்ட சிலருக்கே இருக்கின்றது. இன்னும் பலர் "ஒருவன் கிளியை கூண்டில் அடைத்து வளர்க்க ஆசைப்படுகின்றான்". அதனால் என்ன வளர்த்துவிட்டுப்போகட்டும் இதைத் தடுப்பதால் எவ்வித இலாபமும் நமக்கு ஏற்படப்போவதில்லையே என எண்ணி சுய நலத்துடன் வாழ்கின்றனர். இவர்கள் தமக்கு ஒரு பிரச்சினை ஏற்படும் வரைக்கும் எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபட மாட்டார்கள். இத்தகைய மனிதர்கள் எம்மில் வாழ்ந்துகொண்டிருப்பது அர்த்தமற்ற விடயமாகும். இவர்களை ஒரு பொருட்டாக மதித்து கருத்துக்களில் எடுப்பது ஓர் அவசியமற்ற ஒரு விடயமாகும் என்றே நினைக்கிறேன்.

இத்தகைய நிலமைதான் றிஷானாக்கும். சவுதி அரசாங்கம் அவளை சிறையில் அடைத்து வைக்க ஆசைப்படுகின்றது. மனிதாபிமானம் உள்ளவர்கள் மனு என்றும், ஆர்ப்பாட்டம் என்றும் தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்கின்றனர். நமக்கென்ன இதனால்?, நமக்கு என்ன வரப்போகின்றது? என நினைப்பவர்கள் தினந்தினம் இதுகுறித்து ஏதேனும் சுவாரஸ்யம் இருக்கின்றதா என பத்திரிகைகளில் பக்கங்களை புரட்டுகின்றனர்.

இதுதான் றிஷானாவை மீட்கும் நிகழ்ச்சிகள். இதுதான் இலங்கை உட்பட்ட பல நாடுகளில் ஏற்பட்ட சம்பவங்கள். றிஷானா யார்? அவள் சாதாரண ஓலைக்குடிசைக்குச் சொந்தக்காரி. அவளைக்காப்பாற்ற எடுக்கும் நடவடிக்கையால் எமக்கு ஏதும் வரப்போகின்றதா? இல்லையே! என ஈனக்குணம் படைத்த பலரும், ஓலைக்குடிசைக்காரியை ஒற்றைச்சிறையில் போட்டால் எவன் வருவான் காப்பாற்ற என்ற இறுமாப்புடன் சவுதிஅரசும் றிஷானாவிடையத்தில் செயற்பட்டு வருகின்றன. இதுதான் யதார்த்தமான உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த கொலைக்குற்றத்திற்கு அமெரிக்க பெண்ணோ, அல்லது வேறு சில வல்லரசு நாடுகளின் பெண்களோ சிக்கி இருப்பார்களானால் றிஷானாவின் நிலமை ஏற்பட்டு இருக்குமா? இல்லவேஇல்லை குறித்த சட்டம் அமெரிக்கர்களுக்கு வேறு ஒரு தீர்ப்பை வழங்குகின்றதாம். இங்குதான் சட்டம் என்ற போர்வைக்குள் மறைந்திருக்கும் சவுதியின் முகம் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தால் நம்மை என்ன செய்து விட முடியும்? இவர்களும் நம்மூர்ப் பேரீச்சம் பழத்திற்கு கை ஏந்துபவர்கள்தானே என குறித்த அரசு தன் ஆழ்மனதில் நினைத்து இருந்திருக்கலாம். ஏனெனில் குறித்த விடயம் தொடர்பாக எம்நாட்டு அரசு மேற்கோண்ட மீட்பு நடவடிக்கைகளிற்கு சவுதி அரசு முரண்பட்ட போக்குடன் செயற்பட்டு வந்ததற்கு இதையின்றி வேறு எக்காரணத்தையும் கூறுவது பொருத்தமானதாக இருக்காது எனத்தோன்றுகின்றது.

றிஷானா மீது சுமத்தப்பட்ட கொலைக்குற்றத்திற்கு தகுந்த காரணங்கள் முன்வைக்கப்படவில்லை என ஊடகங்கள் பல சூளுரைக்கின்றன. குழந்தையை றிஷானா கழுத்தை நெரித்துக் கொன்றதாகவும், குழந்தையின் கழுத்தில் றிஷானாவின் கைரேகை இருந்ததாவும் பிரேதபரிசோதனை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்பரடவில்லை. இவ்வாறு போதிய ஆதாரங்கள் அற்ற நிலையில் அவர்களின் உடல்சார்ந்த துன்புறுத்தலின் காரணமாக குறித்த கொலையைத் தானே செய்ததாக ஒத்துக்கொண்டார் என்ற ஒரேகாரணத்துக்காக சிறைகளில் அடைக்கப்படுவதா?

ஒரு நான்குமாதக் குழந்தையை கெல்லத்தான் றிஷானா விமானம் ஏறி சவுதி வந்ததாக கொள்ள முடியுமா? அது எவ்வாறு சாத்தியமாகும்? அதுமட்டுமில்லாமல் 1மாதங்களில் அக்குடும்பம் மீது பகைமை ஏற்படவோ, அல்லது குழந்தை மீது பகைமை ஏற்படவோ வாய்ப்பு இல்லை. அவ்வாறு இருப்பின் றிஷானா பெற்றோருக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டு இருப்பாள். 17வயதுக்குழந்தைக்கு சவுதி அரசு குறிப்பிடும்படியான மேற்கூறிய எவ்வித காரணங்களும் மனிதாபிமான அடிப்படையில் பொருந்தாது. மனிதாபிமானம் மங்கிப்போன சவுதி அரேபியாவில் மட்டுமே இத்தகைய வீண்பழி சுமத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்பதை வெட்ட வெளிச்சமாகக் கூறமுடியும். ஏனைய சமூக நற்சக்திகளால் றிஷானா காப்பாற்றப்பட கடுமையாக முயற்சிக்கப்படுகின்றாள். எனினும் றிஷானா சவுதி வந்தவிதம் அவர்களின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுகின்றது. அதாவது றிஷானாவின் வயது சட்ட விரோதமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் 18 வயதிற்கு மேற்பட்டவராக மாற்றப்பட்டமை. இதனல் 18 வயதுக்கு மேற்பட்டவர் குற்றம் இழைத்தால் அது குற்றமாகவே கருதப்படும். அவ்வாறே அவளுக்குத்தீர்ப்பும் வழங்கப்படுகின்றது. பின்னாளில் மனித உரிமை சார்ந்த அமைப்புக்கள் மூதூர் சென்று றிஷானாவின் வயது 17 மாத்திரமே என உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களைப்பெற்று சவுதி அரசிடம் சமர்ப்பித்த போதும் அது மறுக்கப்படுகின்றது.

நாட்கள் வேகமாக நகர்ந்தும் றிஷானாவைக்காப்பாற்றும் முயற்சிகள் கட்டடங்களில் இருந்து பெயர்க்கப்படும் கற்களைப்போல் ஒவ்வொன்றாக தகர்க்கப்பட்டன. ஒன்றல்ல இரண்டல்ல ஐந்து வருடங்கள் நான்கு சிவர்களுக்குள் நசுங்கிய கனவுளுடன் நரக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கின்றாள். அவள் எந்த நோக்கத்திற்காக சவுதி வந்தாளோ அவை எல்லாம் கனவாய்ப்போய்விடுமோ என்ற ஏக்கம் தினமும் அவளின் மனதில் தோன்ற ஆரம்பிக்கின்றுது. "என்னோடு சேர்ந்து படித்த பிள்ளைகள் எல்லாம் இன்று எவ்வாறு என்ன நிலையயில் இருக்கின்றார்களோ? எனது ஊர் இன்று எவ்வாறு இருக்கின்றதோ? இந்த ஏழு வருடங்களில் எத்தனை மாற்றங்களைக்கண்டிருக்கும். என் சகோதரிகள் எல்லாம் நன்கு வளர்ந்து என் குடும்பம் முழுவதும் சந்தோசமாய்... என் தம்பி நன்கு வளர்ந்திருப்பான், எனக்கு அடுத்து அவன்தானே! இப்போதும் அப்படித்தான் இருப்பானா? அல்லது அப்பாவோடு சேர்ந்து வேலைக்குச்செல்ல ஆரம்பித்து விட்டானா?" இப்படி எல்லாம் அவள் மனம் தன் புலம்பல்களை வெளிக்காட்டுகின்றது. புன்னகை என்பதை அவள் முகம் கடந்த ஏழு ஆண்டுகளாக மறந்திருக்கும். இவ்வாறு இருக்கையில் 2007.01.30இல் குறித்த சிறைச்சாலையில் இருந்து றிஷானா தன்னை நியாயப்படுத்தும் முகமாகவும் இழைக்கப்பட்ட துரோகம் தொடர்பாகவும் எழுதப்பட்ட கடிதத்தை பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007-01-30

அல்தவாதிமி சிறைச்சாலை
அல்தவாதிமி.

தற்போது அல்தவாதிமி சிறைச்சாலையில் கொலைக்குற்றச்சாட்டின் பேரில் சிறை வைக்கப்பட்டுள்ள ரிஷான நபீக் ஆகிய நான் இன்று பின்வருமாறு வாய்மொழி இடுகின்றேன். மேற்படி நான் முதலில் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுத்தொடர்பாக இலங்கைத் தூதரக அதிகாரிகளுக்கு வழங்கிய வாக்குமூலத்திற்குப்பதிலாக இன்று தெளிவான மனநிலையுடன் பின்வருவனவற்றைக்கூறுகின்றேன்.

இலங்கையில் எனது முகவரி எம்.எஸ் நபீக், சா.்.பிநகர், மூதூர். என்பதாகும். எனது உண்மையான வயது 19. பிறந்த திகதி 02.02.1985. எனது சப் ஏஜண்ட் வஹிர்தீன் என்பவர் பிறந்த திகதியை 02.02.1982 எனக்குறிப்பிட்டு பாஸ்போட் வழங்கினார். முதலில் நான் 2005.04.01இல் சவுதி வந்தேன். எனது சவுத் பாபா வீட்டில் $1\frac{1}{2}$ மாதம் வேலை செய்தேன். குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் இருக்கவில்லை.


இந்த வீட்டில் சமைத்தல் (ஆக்கும் வேலை) உட்பட கழுவுதல், 4மாதக்குழந்தையை பார்த்தல் ஆகியவற்ரை செய்தேன். இவ்வீட்டுக்கு வந்தது முதல் இக்குழந்தையை பார்க்கும் வேலை செய்தேன். இவ்வீட்டாருடன் சந்தோசமாய் இருந்தேன். குறித்த சம்பவ தினம் ஞாபகம் இல்லை. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 இருக்கும். அப்போது வீட்டில் யாரும் இல்லை. அக்குழந்தைக்கு மேலதிகமாக 4,3 ஆண் பெண் குழந்தைகள் உண்டு. வழமையாக நான் தான் குழந்தைக்கு பால் கொடுக்கின்றேன். வழமை போல் ஊட்டிக்கொண்டு இருக்கின்ற போது குழந்தையின் வாய்,மூக்கு மூலம் பால் கொட்ட ஆரம்பிக்கும் போது இக்குழந்தையின் தொண்டையை மெதுவாகத் தடவினேன் அப்போது குழந்தை கண்மூடி இருந்தபடியால் குழந்தை தூக்கம் என நினைத்தேன். எனவே மாமா 1.30 மணிக்கு மாமா வந்து சாப்பிட்டுவிட்டு பிள்ளையை பார்த்துவிட்டு செருப்பால், கையால் அடித்து விட்டுப்போனார். எனது வாய் மூக்கில் இருந்து இரத்தம் வந்தது. பின் பொலீஸ் வீட்டுக்கு வந்து என்னை எடுத்துச் சென்றனர். பொலீஸில்வைத்து எனக்கு அடித்தனர். ஒரு பட்டியால் அடித்து குழந்தையின் கழுத்தை நெரித்ததாக கூறுமாறு வற்புறுத்தினர். அவ்வாறு கூறாவிடின் கொல்லுவதாகவும், கரண்ட் பிடிப்பதாகவும் கூறியதால் அவர்கள் எழுதிய பேப்பரில் கையெழுத்திட்டேன்.


என்னை வேறு இடத்திற்கு கொண்டுபோய்க் கேட்டபோது பயம் காரணமாகவும் ஞாபக சக்தி இல்லாத காரணத்தினால் கழுத்தை நெரித்ததாக கூறினேன். அல்லா மீது சத்தியமாகக் குழந்தையை கொல்லவென கழுத்தை நெரிக்கவில்லை. மேற்படி எனது வாக்குமூலத்தை வாசித்து விளங்கிய பின்பு உண்மை என உறுதி எடுத்து கையொப்பமிடுகின்றேன்.

N.Risana

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றிஷானாவின் கடவுச்சீட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அவர் கடிதத்தில் குறிப்பிடுகின்றார். அவர் சிறையில் தன்னை நியாயப்படுத்தி எழுதிய கடிதங்கள் கொஞ்சமில்லை. விட்ட கண்ணீரத்துளிகளும் கொஞ்சமில்லை. இவள்பட்ட துன்பங்களை சிறையின் நான்கு சுவர்களும் நன்கு உணர்ந்து இருக்குமே தவிர சவுதி அரக்கர்கள் உணர்ந்திருக்க வாய்ப்பு இல்லை. கண்ணீரிலே காலங்களை கழித்துக்கொண்டு இருக்கும் றிஷானாவுக்கு கியாபா மூலம் வழங்கப்படும் தனது குடும்பத்தின் புகைப்படங்கள் மட்டும் ஆறுதல் அளித்திருக்கும். ஆயினும் இறுதியாக புகைப்படம் ஒன்றைப்பெற்று அவர் றிஷானாவிடம் கொடுக்க முனைந்த போது அது மறுக்கப்பட்டதாவும் அவர் கூறினார். இவ்வாறு வஞ்சகமான செயற்பாடுகளை சவுதி மனிதாபிமானம் அற்ற முறையில் இவள்மீது மேற்கொண்டு வருகின்றது. அவள் 7 வருடங்களாக உடலளவிலும் மனதளவிலும் அணுஅணுவாக இறந்து கொண்டிருந்தாள்.

இவ்வாறு இருக்கையில்த்தான் **09.01.2013 புதன்கிழமை றிஷானா விடுதலை செய்யப்படுகின்றாள்.** ஆம்; அதை அவளின் விடுதலை என்றுதான்கூறவேண்டும். பொதுவாக சவுதியில் வெள்ளிக்கிழமைகளில்தான் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படும். ஆனால் றிஷானாவுக்கு மட்டும் புதன்கிழமை குறிக்கப்படுகின்றது.

**"றிஷானா மிகவும் பாதுகாப்பான முறையில் கம்பிகளால் அடைக்கப்பட்ட வாகனத்தில் சவுதியின் மத்தியில் கொண்டுவரப்படுகின்றாள். வெள்ளை உடை தரித்த வேதாளங்கள் அவ்விடத்தைச்சூழ்ந்து கொள்கின்றன. வேடிக்கை பார்க்கும் மக்கள் கூட்டமும் அவ்விடத்தை முற்றுகையிடுகின்றது. ஷரிஆ சட்டம் பாடும் ஓர் ஊதுகுழல் உரத்த சத்தத்தில் ஊத ஆரம்பிக்கின்றது. நீதியை நிலை நாட்டும் காவற்றுறையினர் றிஷானாவின் இரு கரங்களையும் பற்றி கொலைக்களத்தின் நடுவே அவள் கைகளும், கண்களும் கட்டப்பட்ட நிலையில் அழைத்து வருகின்றனர். வெள்ளுடை போர்த்திய வேதாளங்கள் அவளை முட்டுக்காலில் அமரும்படி பணிக்கின்றனர். ஊதுகுழல்கள் பேரார்வத்தில் கத்துகின்றன ஏற்கனவே உள்ள பழக்க தோசத்திற்போலும். ஆனால் றிஷானாவின் மனம் மட்டும் அமைதியாய் ஒன்றை மட்டும் வேண்டுகின்றது. அது "ஓ.. இறைவா! (அல்லா) மீண்டும் ஒரு றிஷானா இந்தப்பூமியில் பிறந்து விடக்கூடாது. பிறந்தாலும் பிறந்த உடனேயே இறந்து விட வேண்டும்" என்பதை மட்டும்தான். ஒரு வேதாளம் அவளின் கழுத்தை சரி செய்கின்றது. வெட்டுவதற்கு இதமாய் இருப்பதற்குப் போலும். மேலும் ஓர் வேதாளம் மற்றய வேதாளத்துடன் ஏதோ ஓர் புரியாத வார்த்தையால் பேசுகின்றது. றிஷானாவுக்கு அவ்வார்த்தைகள் ஒன்றும் புதிதல்ல ஆரம்பத்தில் இருந்து புரியாதது புரியாததுதான். ஒருவேதாளம் வாள் ஒன்றை எடுத்தது. அதன் புருவங்கள் எங்கும் பளபளக்கிறது. அதனிடமிருந்து ஓர் ஆணவச்சிரிப்பு, எதையோ சாதிக்கப்போகின்றேன், நீதியை வெல்லப்போகின்றேன் என்ற ஓர் இறுமாப்பு. இது மட்டும் றிஷானாவுக்கு புரிந்து கொள்கிறது. அவள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் இருந்து கன்னங்களைத்தடவும் கண்ணீர்த்துளி தரையைத்தொடமுன்பு அவள் தலை நிலத்தில் உருள்கிறது.

அப்போது இலங்கை நேரம் பி.ப 2.10 மணி அளவுக்கு உயிரற்ற உடல் சவுதி மணலில் சாய்கிறது. சவுதி மண் எத்தனையோ பேரின் இரத்தத்தை குடித்த பழக்கதால் நொடிப்போலுதில் றிஷானாவின் இரத்தத்தையும் சுவைக்கின்றது. ஆனாலும் அதன் தாகம் அடங்கவில்லை என்பது அது குடித்த வேகத்தில் இருந்து தெரிகின்றது.

சவுதியில் சாய்ந்தது றிஷானாவின் உடலுமல்ல, சவுதி மண் குடித்தது றிஷானாவின் குருதியையும் அல்ல. மாறாக ஓர் ஏழைச்சிறுமியின் கனவுகளை, தன் சகோதர சகோதரிகள் கல்வியிலும் வாழ்க்கையிலும் உயர வேண்டும்; எனது அப்பா,அம்மா பட்ட துன்பகளுக்கெல்லாம் விடுதலை, தனது ஓலைக்குடிசை ஓர் கல்வீடாக மாற வேண்டும் என்ற அவா; தனது சகோதரனும் சகோதரிகளும், தன் பெற்றோரும் ஒரு வேளை உணவையாவது நிம்மதியாக உண்ணவேண்டும் என்கின்ற ஓர் விருப்பம். இவைதான் றிஷானாகண்ட கனவுகள். இவற்றைத்தான் சவுதி விழுங்கிக் கொண்டது. இதுமட்டுமல்ல றிஷானாவை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்ற மனித குணம் கொண்டவர்களின் எண்ணம், அவர்களின் உழைப்பு. இவற்றை எல்லாம்தான் சவுதி குடித்திருந்நது.

இந்தச்சவுதியில் 7 வருடங்களாக அணுஅணுவாக இறந்த றிஷானாவுக்கு இந்த மரணம் மட்டும் பெரிதாக வலிப்பதற்கு வாய்ப்பு இல்லை. உன்மையில் இது அவள் பட்ட துன்பங்களுக்கு அவ் அரக்கர்களால் அளிக்கப்பட்ட விடுதலை என்றுதான் கூற வேண்டும். ஒரு இளம் பெண் தனிமையில் வாழ்வாளாயின் அவள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எத்தகையது என உங்களாலும் உணரமுடியும். அவ்வாறே இவள் சவுதியில் எத்தனை துன்பங்களை எல்லாம் அனுபவித்திருப்பாள் என்பதையும் உங்களால் ஊகித்து அறிந்து கொள்ள முடியும்.

றிஷானா உங்களைக்கொன்று விட்டேன், உங்களுக்கு சரியான தீர்ப்பை வழங்கி விட்டேன் எனக்கூறி முதுகெலும்பை நிமித்தி ஆட்சிக்கதிரைகளில் உட்கார்ந்திருப்பவர்கள் ஒன்றும் சாதனை ஆளர்கள் கிடையாது. அதேபோல் அவர்கள் மனிதத்தை உணர்ந்தவர்களாகவும் இருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் போற்றும் ஷரிஆ சட்டம் அமெரிக்கர்களுக்கு வேறு ஒரு தீர்ப்பை

வழங்குகின்றது. இவ்வாறு ஆளுக்கொரு சட்டம் இயற்றி போலி வாழ்க்கை நடத்தும் இந்த வேதாள அரசாங்கத்திடம் இன்னும் எத்தனை றிஷானாக்கள் சிக்கித்தவிக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் விடிவுகாலம் மரணம் ஒன்றுதானா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை செய்ததாக கூறப்படும் குழந்தை



## சவுதி மன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள றிஷானா! உங்களைக் காப்பாற்ற முடியாத அளவுக்கு மிக மோசமாகத் தோற்றுப்போன நாடு ஒன்றில் வாழ்வதை எண்ணி வருத்தத்துடன் ஓடிக்கொண்டு இருக்கிறது எமது வாழக்கை. றிஷானா! உங்கனை யாராலும் காப்பாற்ற முடியவில்லை நீங்கள் நம்பிய அல்லாவாலும்கூட. இங்கு கடவுள்கள் எல்லாமே பெயரளவில் அதிகாரத்தில் இருக்கின்றார்கள். இங்கு பணமும் அதிகாரங்களும் மட்டுமே இறுதிவரைத் தீர்ப்புக்களை எழுதுகின்றன. சிறு வயதில் செய்ததை தீர அறியாத 5 ஆண்டுகள் வதைத்து பேரீச்சம் மரங்களுக்கு உங்களை உரமாக்கிய மன்னிப்பு என்கின்ற வார்த்தைக்கு மறுவடிவம் தெரியாதவர்களிடம் நீங்கள் சிக்கித்தவித்து பட்ட வேதனைகளையும், துன்பங்களையும் நன்கு உணர்கின்றோம்.

நாங்களும் ஒன்றைத்தான் கூற விரும்புகின்றோம். மீண்டும் ஓர் றிஷானாவுக்கு இத்தகைய நிலை வந்து விடக்கூடாது எனபதை. இவ்வாறு உங்களுக்காக மனதார வழிகின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எல்லாம் வல்ல எல்லோருக்கும் பொதுவான இறைவனை திட்டிக்கொண்டும் அவனிடத்தேயே எதிர்கால றிஷானாக்களுக்காக வேண்டிக்கொண்டும் உங்களது ஆத்மாவினுடைய சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்!!!

**உயிரின் கனவுகளை உட்புதைத்துக் கொண்டு
உலகமறியா வயதில் வறுமையின் கோடுகளை
அறுத்தெறியும் நம்பிக்கையோடு நடைபோட்டாய்
–பாலைவன தேசத்திற்கு. காலம் உன்
இதயத்தில் கல்லெறிந்து விதி விரித்த வலையில்
விண்மீன் நீ சிக்கினாய் இறுக்கமான சட்டம்
இறுதிவரை மரணதண்டனையில்மாற்றமில்லையென
மறுபடியும் மறுபடியும் சொன்னதுபுரியாத
குற்றத்திற்காய் தண்டனையென நீதவித்தாய்
மனிதங்கள் தினமும் இறைவனிடம் மன்றாட
இறுதியில் இறைவின் தீர்ப்போ நீ சட்டத்திற்கு
அடிபணிந்தாய். உனக்காய் எங்களுள்ளம் இப்போதும்
துடிக்கிறது.**

**(பா.றிசாந்தன்–ஹொப்டன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓலைக்குடிசையிலே............**

மகளின் வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டு இருந்ததாய் 09.01.2013 அன்று அதிர்ச்சியில் உறைந்து போகின்றாள். அந்தத் தாயுடன் சேர்ந்து மூதூரும் சோகத்தில் ஆழ்ந்து போகின்றது. மகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டதை கேள்வியுற்ற றிஷானாவின்தாய் செய்வதறியாது திகைத்து நின்றார்; நம்ப மறுத்தாள்; றிஷானாவின் தந்தை மௌனித்தார். இரு தங்கைகளும் கதறிஅழுதனர். அன்று றிஷானாவின் தாய், தந்தைமட்டுமல்ல உலகில் உள்ள மனிதகுணம் கொண்ட அனைவரினதும் மனங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் துயரச்சம்பவம் அது.

எவ்வாறுதான் அதை ஜீரணித்துக்கொள்ள முடியும்? 15 வருடங்கள் பாலுட்டிச்சீராட்டி வளர்த்த ஆசை மகள் அல்லவா! சோகத்தில் பெரிய சோகம் புத்திர சோகம். இப்படி இருக்கையில் தந்தையினது இதயம் எப்படி இதைத்தாங்கிக் கொள்ளும். ஏற்கனவே அவர் இதய நோயாளியும் கூட. தங்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த அக்காவின் இழப்பை அன்புச்சகோதரிகலும் நிச்சயம் தாங்கியிருக்க முடியாது. இந்தப்பிஞ்சு வயதில் ஏன் இவர்களுக்கு இத்தனை சோதனை. பெற்ற மகள் திரும்பி வருவாள். அவளைக்கட்டி அணைத்து முத்தமிடலாம் என்றெல்லவா நினைத்திருப்பார்கள். இறுதியில் அவளது திரு உடல்கூட எம்பூமிக்கு வராமற்போய்விட்டதே. இதனை எவ்வாறுதான் ஏற்றுக்கொள்ள முடியும். தண்டனையைத்தான் வழங்கி விட்டோம் அவளது திருவுடலை சொந்த நாட்டுக்கு அனுப்பிவைத்தால்த்தான் என்ன? அவள் அதற்கும் தகுதியற்றவளாக்கப்பட்டு விட்டாளா? இல்லை அவளின் புனித உடலைத் தொடும் அருகதைகூட சவுதி அரசுக்கு இல்லவே இல்லை!. பாவிகள் ஆனாலும் அவளை அங்கேயே பேரீச்சம் மரங்களுக்கு உரமாக்கி விட்டனர். இவற்றையெல்லாம் ஒரு தாயால், ஒரு பெண்மையால் எவ்வாறு தாங்கமுடியும், பத்து மாதம் சுமந்து பெற்ற வரமெல்லவா றிஷானா. அவள் பிறக்கும்போதும், வளரும்போதும் இவ்வாறு நேருமென நினைத்திருப்பார்களா? இல்லையே! எதிர்பார்க்காத ஓர் இழப்பை எப்படித்தான் தாங்க முடியும். அவர்கள் மனதை எதைச்சொல்லித்தான் ஆறுதல்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புடையீர்........**

றிஷானா என்ற எம் முஸ்லீம் சகோதரியின் வரலாற்றினூடக நான் கூறவருவது “வெளிநாட்டு மோகம் வேண்டாம்” என்கின்ற ஒன்றைத்தான். எல்லா நாடுகளும் எம் நாட்டைப்போல் சட்டதிட்டங்களைக் கொண்டவையல்ல. சில நாடுகள் மிகவும் மூர்க்கத்தனமான செயற்பாடுகளை சட்டம் என்கின்ற போர்வையின்கீழ் நடத்தி வருகின்றன. தண்டனைகள் என்பது குறித்த மனிதன் மீண்டும் அந்தத் தவறைப்புரியாமல் இருக்க அவனை வழிப்படுத்துவதேயாகும். சட்டம் எனக்கூறிக்கொண்டு அவர்களுக்குச் சிரச்சேதம் செய்வது எந்த வகையில் அவர்கள் திருந்தி வாழ வழியமைக்கும். சிரச்சேதம் என்பது இன்று குறிப்பிட்ட சில நாடுகளிலேயே நடைமுறைப்படுத்தப்படும் விடயம். ஒருவன் எத்தகைய குற்றங்களைச்செய்திருப்பினும் அவர்களை பொது இடத்தில் வைத்து சட்டம் எனக்கூறி கொலை செய்வது எவ்வகையில் மனித மனங்களால் ஏற்றுக்கொள்ள முடியும். இப்படிக்கொடூரமாக கொலை செய்யும் அளவுக்கு சட்டக்கட்டுப்பாடுகள் கூடிய ஒரு நாடுதான் சவுதிஅரேபியா. இங்கு மன்னராட்சியின் கீழ் இஸ்லாம் சமயம் போற்றும் ஷரிஆ சட்டத்தின்படி கொலைக்குக்கொலை என்ற வகையில் அங்கங்களை வெட்டுதல், கல்லெறிந்து சாகடித்தல், உரலில் இட்டு இடித்து கொலை செய்தல், தலை வெட்டுதல் போன்றவை குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களுக்கு தண்டனைகளாக வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பல கொடூரமான தண்டனைகளை இதுபோன்ற சில நாடுகளே கடைப்பிடித்து வருகின்றன. ஆனால் எமது நாடு போன்ற நாடுகளில் குற்றவாளிகளுக்கு மரணதண்டனைகளை குறைத்துவிடும் அளவுக்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதனை நெறிப்படுத்தும் சட்டங்கள் காணப்படுகின்றன.

அந்தவகையில் எமது நாட்டவர்கள் வெளிநாடுகளுக்குப்போவதன் காரணம்தான் என்ன? பிளைப்புத்தேடிப்போகின்றோம் எனக்கூறி படுகுழியில் விழ எத்தணிக்கின்றனரே! இத்தகைய காரணத்தை கூறிக்கொண்டு எமது நாட்டுபெண்களும் அல்லவா பிற நாடுகளுக்கு வேலைதேடிச்செல்கின்றார்கள். ஒருசில பெண்கள் தாய்நாட்டில் கல்வி கற்று மேற்படிப்பும் படித்துவிட்டு தமது திறமைகளை வெளிநாடுகளுக்கு விற்கமுனைகின்றார்கள். இதுவா நீங்கள் தாய்நாட்டுக்குக்காட்டும் விசுவாசம்? ஆனால் இத்தகைய காரணங்களைக்காட்டி செல்வோர் குறைவு. இன்னும் பலபேர் வறுமையை காரணங்காட்டுகிறார்கள். குறித்த பெண் திருமணமாகியிருப்பாள், மூன்று நான்கு குழந்தைகளும் இருக்கும், ஆனால் கணவன் பிரிந்து வாழ்பவராக அல்லது இறந்து போய் இருப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியிருக்கையில் தனது பிள்ளைகளை ஆளாக்கும் பொறுப்பு அவளுடையதாகின்றது. எனவே அவள்தானே தன் குடும்பத்தை உழைத்துப்பார்க்கும் நிலைக்கும் தள்ளப்படுகின்றாள். இவ்வாறான காரணங்களைக்காட்டி வெளிநாட்டுக்குச்செல்லும் பெண்கள் எம் நாட்டில் ஏராளம். இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டு எத்தனையோ பெண்கள் இன்று கணவனை இழந்து பல துன்பங்களின் மத்தியில் தங்கள் குழந்தைகளை வளர்த்து வருகின்றார்கள். இத்தகைய பெண்களும் இன்று வெளிநாட்டு வேலை வாய்ப்பையே எதிர்பார்த்து காத்து இருக்கிறார்கள். அத்தகைய பெண்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கு நான் வெளிநாட்டுக்குச்செல்லும் பெண்களை மட்டும் மையப்படுத்தி கூறுவதன் காரணமும் இதுதான். எமது நாட்டிலும் சரி ஏனைய நாட்டிலும் சரி வீட்டுப்பணிப்பெண்ணாக செல்பவர்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை, அவர்களது வேலை நேரமும் மட்டுப்படுத்தப்படவில்லை. இரவுபகலாக வேலை செய்யவேண்டி இருக்கும். அதுமட்டுமின்றி வீட்டு எஜமானினதும் அவர் பிள்ளைகளினதும் காமப்பசிக்கு இரையாக வேண்டியிருக்கும். மேலும் எஜமானியினது அராயகத்திற்கும் உட்பட வேண்டியிருக்கும். இவ்வாறு தாங்கெனா துன்பங்களை அனுபவித்து வருபவர்கள் பெண்களே. இத்தகைய துன்பங்களுக்கு உட்பட்ட பலபேரை எம்மால் இனங்காட்ட முடியும். அண்மையில்க்கூட பணிப்பெண்ணாக சென்ற பெண்ணொருவர் உடலெங்கும் ஆணிகள் ஏற்றப்பட்ட நிலையில் எமது நாட்டுக்கு திரும்பி வந்தார். அது போன்றே கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாயான இலங்கைப் பெண் குறித்த நாட்டில் பணிப்பெண்ணாக வேலைக்குச்சென்று வீட்டு எஜமானாரிடம் தன் உழைப்புக்கான கூலியைக்கேட்டபோது கொதிக்கும் எண்ணெய்யால் கைகளில் ஊற்றப்பட்டு எமது நாட்டுக்கு திரும்பிவந்தார். இவையே அதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இவ்வாறு அடிமாடுகளாக உழைத்து அனுப்பும் பணத்தில் எத்தனைபேரினது வாழ்க்கைகள் செழிப்படைந்துள்ளது, எத்தனைபேரினது கனவுகள் நினைவாக்கப்பட்டுள்ளது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலபேரினது வாழ்க்கையே மாற்றங்கண்டுள்ளது. எஞ்சியோரினது வாழ்க்கையின் நிலைதான் என்ன? பிழைக்கச்செல்லும் பெண்கள் பிணங்களாக வருதைப்பார்த்தும்கூட வெளிநாட்டு மோகம் அவசியம்தானா?

எமதுநாட்டிலிருந்து பணிப்பெண்களாக வேலைக்குச்செல்லும் பெண்களின் நிலமை பற்றி எவ்வித ஆட்சேபனைகளையும் எமது நாடு செலுத்துவதில்லை. ஏனெனில் எமது நாடு எதிர்பார்த்து நிற்பது அன்னியச்செலாவணியை மட்டுமே. இதனால் பாதிக்கப்படுவது நாம்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையை மட்டும் அடிப்படையாகக்கொண்டு வெளிநாடு செல்லும் பெண்கள் வியர்வை, கண்ணீர், இரத்தம் ஏன் உயிரோடு போராடி அனுப்பும் பணம் உங்கள் குழந்தைகளை வளர்க்க உதவுகின்றதா? தாயின் அரவணைப்பில் வளராத குழந்தை நிச்சயம் சமுதாயத்தில் நற்பிரஜையாக வளரும் சந்தர்ப்பம் குறைவாகவே காணப்படுகின்றது. கணவன்மார்களும் பொறுப்பற்று மது, போதைவஸ்துக்கு பாவனைக்கு ஆளாவது தொடக்கம், பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபடுவது வரை பல சீர்கேடுகளை நிகழ்த்துகிறார்கள். இவ்வாறு அவர்கள் குடும்பத்தினதும், சமூகத்தினதும் கலாசாரத்துக்கு பங்கம் விழைவிக்கின்றார்கள். இவ்வாறான சீர்கேடுகள் இடம் பெறுவதற்கு வெளிநாடு செல்லும் நீங்களும் காரணமாகி விடுகின்றீர்கள். இவ்வாறு உங்கள் குடும்பத்தையே படுகுழியில் தள்ளிவிடும் இந்த பயணங்கள் எமக்குத்தேவைதானா? வெளிநாட்டுப்பயணம்தான் உங்களின்வறுமையை போக்கும் என உணருகின்றீர்களா? ஏன் எமது நாட்டில் பிழைப்பதற்கு வழி கிடையாதா? இருக்கிறது. எமது நாட்டில் பல சுயதொழில்திட்டங்களும் அதனை நடைமுறைப்படுத்தும் ஏராளமான நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. அந்நிறுவனங்கள் உங்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கிவருவதுடன், கடனுதவிகளையும் சுயதொழிலுக்கான குறைந்த வட்டியிலான, வட்டியல்லாத கடன்களையும் வழங்கி வருகின்றன. தையல், வீட்டுத்தோட்டம், அலங்காரப்பொருள், நன்னீர் மீன்வளர்ப்பு, விலங்கு வேளாண்மை, உணவுப்பொருள் உற்பத்தி செய்தல் போன்ற ஆயிரக்கணக்கான சுய தொழில்கள் உள்ளன.

எமது நிலைமை, கல்வித்தரம், சமுகத்தொடர்புகள் என எம்மால் எது முடியுமோ அவற்றிற்கு சாதகமான தொழிலை இனங்கண்டு ஆரம்பிப்பதன் மூலம் நிச்சயம் வெற்றி காணலாம். கொஞ்சம் பணத்தையே முதலிட்டு அவற்றின் மூலம் இலாபம் உழைக்க வழியிருக்க நாம் ஏன் வெளிநாடு சென்று அவர்களுக்கு அடிமையாக வாழவேண்டும். எதற்காக எம் உடலையும் உழைப்பையும் விற்க வேண்டும்? சுயதொழில் செய்ய ஆரம்பிக்கும் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட சில ஆண்டுகளின் பின்னர் ஒரு நிறுவனத்திற்கே உரிமையாளராக மாறமுடியும். பலருக்கு வேலை வழங்குவதன்மூலம் அவர்களின் வாழ்க்கைக்கும் ஒளியேற்ற முடியும். சுயதொழில் செய்யும் ஒவ்வொரு பெண்ணாலும் வேலையின்மை குறையும், உள்நாட்டு உற்பத்தித் தரம் அதிகரித்தல் போன்ற பல நன்மைகள் எமது நாட்டுக்குக் கிடைக்கின்றது. சுயதொழிலை எம்நாட்டில் ஆரம்பித்து வளமான ஓர் எதிர்காலத்தை எம் சந்ததிக்குப் பெற்றுக்கொடுக்க நாம் அனைவருமே கடமைப்பட்டு இருக்கின்றோம். “வெளிநாட்டு மோகம் எம் சந்ததிக்கே சாபம்” என நம் நாட்டு அனைத்து சகோதர,சகோதரிகளும் உணர்ந்து செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் குறித்த நூல் அரசியல் சார்ந்த பிரச்சினைகளைத் தோற்றிவிக்கவோ, எமது நாட்டு அரசாங்கத்தை குறைகூறவோ, மதம்சார்ந்த பிரச்சினைகளைத் தோற்றிவிக்கவோ, எந்தவொரு தீய எண்ணத்தை வாசகர் மனதில் பதிப்பதை மையப்படுத்தியோ எழுதப்படவில்லை என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். உண்மை நிலவரங்களை எம்மவர்க்கு தெளிவுபடுத்துவதற்கு பல்வேறு உதாரணங்கள் முன்வைக்கப்பட்டபோதும் அது வாசகர்களிடையே எவ்வித முறணான போக்கையும் விதைக்காது இந்நூலின் நோக்கத்தை அடைய வழிசமைக்கும் என நம்புகின்றேன். “தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்” என்பர். ஒவ்வொரு மனிதனின் உயிரும் விலை மதிப்பற்றது. அத்தகைய பெறுமதிக்குச் சொந்தக்காறரான நாம் தினமும் ஓர் உண்மையைத்தேடி புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். பிறந்தோம்; இறந்தோம்; என்கின்ற வாழ்க்கை சமுதாயத்தில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாது. இறைவனால் படைக்கப்பட்ட உன்னத படைப்பே மனிதனாவான். அவனிடத்தில் எப்போதும் மனிதப்பண்புகள் நிறைந்து காணப்பட வேண்டும். அதுவே பிறந்தோம்; சாதித்தோம்; என்கின்ற நிலையை ஏற்படுத்தும். இனம், மதம், மொழி இவை எவையும் எம்மைப் பிரிக்கவில்லை நாம்தான் அவற்றைப்பிரித்தோம். ஆகவே மனிதன் அனைவருமே ஓர்ஜாதி அது மனிதஜாதி, நம் எல்லோருக்கும் ஓர் பொதுவானதொரு பண்பு. அது மனிதப்பண்பு, எமக்கொரு பொதுவானதொரு அரசாங்கம், பொதுவானதொரு தலைவன். அவனே நம் எல்லோருக்கும் பொதுவான இறைவன். இங்கு எவனும் எவனாலும் ஆளப்படுவதுமில்லை, எவனும் எவனாலும் அடக்கப்படுவதுமில்லை. அதுவே ஜனநாயகத்தின் பிறப்பிடமாகும்.

**நன்றி**

**தி.சசிகரன்** (2014com)
**அக்கராயன் ம.வி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரச்சேதம் செய்யும் தரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



٣٠/٠١/٢٠٠٧ م الموافق ١١/٠١/١٤٢٨هـ

سجن الدوادمي

أنا ريسانا نافيك حاليا مسجونة في سجن الدوادمي بتهمة القتل، أقر ما يلي اليوم اقر بنفس سليم من خلاف عن اقراري الذي اعطيت لمندوبي السفارة سابقا. عنواني في سري لانكا، إم اس نافيك, شافي ناكار، موتور. إن عمري الحقيقي تسعة عشر سنة. وتاريخ ميلادي ٢/٢/١٩٨٨ م و قد قام وجر الدين أحد مندوب مكتب إستقدام بسري لنكا بتزوير جواز سفري بتغيير تاريخ ميلادي الى التاريخ ٢/٢/ ١٩٨٢ م وقد وصلت أولا إلى السعودية بتاريخ ١ / ٤/٢٠٠٥ م وقمت بعمل في بيت كفيلي لمدة شهر ونصف ، ما كان عندي أي مشاكل أثناء عملي في البيت، وقد تم التكليف بعمل الطباخة والغسل، ورعاية الطفل عمره أربعة أشهر. منذ تاريخ وصولي إلى هذا البيت قمت براعاية هذا الطفل. كنت اعامل مع أهل بيتي معاملة حسنة , وأنا لا أتذكر ذلك اليوم الذي صار الحدث. كما أذكر لعل هذا اليوم كان يوم الأحد. وكان الوقت حول الساعة ١٢,٣٠ ظهرا. وقتئذ ما كان أحد في البيت الا ولد و بنت عمرهما على الترتيب اربع وثلاث سنوات. وعادة أنا الذي كنت أرضع ذلك الطفل. حينما كنت أرضع الطفل بدأ الحليب أن يخرج من فمه وأنفه، فحينئذ دلكت حنجرته، وبعد ذلك ظننت أنه كان نائما حيث أن عيني الطفل كانتا مغطية. ثم وصلت ربة البيت إلى البيت نحو الساعة الواحدة ونصف ظهرا، وتناولت الغداء وذهبت إلى غرفة الطفل ونظرت إليه، وفورا قامت ربة البيت بضربي بيديها والأحذية، وسالت الدم من فمي وأنفي. وبعد ذلك أخذت طفلها وخرجت من البيت. وثم وصلت الشرطة إلى البيت وأخذتني إلى الشرطة وهناك ضربوني بالأنبوبة وأجبروني أن أعترف على أنني قمت بضغط حنجرة الطفل وخوفوني إن لم أعترف بذلك ولعلي أعذب بالكهرباء أو أقتل. ولذا خوفا على حياتي قد قمت بالتوقيع على ورقة المكتوبة. وبعد ذلك أخذوني إلى مكان اخر و قاموا بالتحقيق وهناك قد إعترفت أمامهم خوفا على حياتي وفقدان ذاكرتي بأنني قمت بقتل هذا الطفل بضغط حنجرته.

الموقع
إن. رسانا

أصادق على صحة الترجمة والصورة مطابقة للأصل

N. M. Mohamed
Third ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றிஷானா கொல்லப்பட்ட காட்சி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பிற்குரிய வாசகர்களே!
குறித்த நூல் எமது நாட்டின் முஸ்லீம் சகோதரி றிஷானா நபீக் அவர்களுடைய வரலாற்றை சார்ந்து நிற்கின்றது. இந்த நூல் எழுதப்படுவதன் நோக்கமே "இன்னும் ஒரு றிஷானா உருவாக்-கப்பட்டுவிடக்கூடாது"என்பதற்காய். இன்று எம்மவர்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கும்

அனேகபெண்மணிகள் வெளிநாட்டு மோகம் கொண்டவர்களாகவே வாழ்கின்றனர். எமது நாட்டில் எத்தனையோ பிழைக்கும் வழிகள் இருக்க அயல் நாட்டுக்கு எம்மை விற்றுத்தான் பிழைத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற அவசியம் என்ன இருக்கின்றது ? வெளிநாடுகளில் வேலைக்கு செல்பவர்களை குறித்த நாடுகள் அடி மாடுகளாகவே கருதுகின்றது. இத்தகைய நாடுகள் அவர்கள் மீது தன் அடிமைச்சாசனத்தை எழுதுகிறது.பிழைக்கச்சென்றவர்கள் எமது நாட்டுக்கு பெட்டிகளாக வருவதைப்பார்த்தும் கூட எம்மவர்களின் மனம் திருந்த மறுக்கிறது. இத்தகைய நிலையை முழுமையாக மாற்றாவிட்டாலும் சிறிதளவேனும் மாற்ற விழைகிறேன்

குறித்த விடயத்தில் எமது அரசாங்கம் வெளிநாட்டுச்செலவாணியை எதிர் பார்த்து அக்றை செலுத்தும் வீதத்தை குறைத்திருக்கிறது. ஆனால் குறித்த விடயத்தில் நாம்தான் உணர்ந்து செயற்பட வேண்டும். இன்று பெண்களின் வாழ்வை முன்னேற்றகரமாக்கும் எத்தனையோ வரப்பிரசாதங்களை எமது நாட்டு அரசாங்கம் வழங்குகின்றது. அவற்றை உங்கள் வசமாக்குங்கள்.
அற்ப ஆசைக்காய் அன்புச்சொந்தங்களை இழந்துவிடாதீர்!!!!!

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org